DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No.115/2021

Police Station : - Kadampuliyur P.S

Deposition of Witness prosecution- LW.4 / PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | சிவகுருநாதன் | Taluk | பண்ருட்டி |
| Father's/ Husband's Name | வெங்கடேசன் | Village | |
| Age | | Calling | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 09.07.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு. லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

(A1, A2 present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.H.ஹலிமா பீவி WHC 937 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது அழகப்பாசமுத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது மர வியாபரம் வேலை செய்து வருகிறேன். அசா2 சிவசக்திவேல் என்பரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் என் கையொப்பம் இல்லை. மேற்படி ஆவணத்திலுள்ள சாட்சி கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் எதிரிகள் எனது ஊரைச்சேர்ந்தவர்கள் என்ற வகையில் எனக்கு பழக்கமானர்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் கடந்த 08.01.2020 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் நானும், எங்கள் தெருவை சேர்ந்த சிவசக்திவேல் என்பவரும் எங்கள் ஊரில் நான்கு முனை ரோடு அருகே நின்றுக்கொண்டுயிருந்த போது காடாம்புலியூர் காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கு சம்பவயிடத்தை அடையாளம் காட்ட சொல்லி கேட்டதன் போரில் நாங்கள் இருவரும் அடையாளம் காட்டிய சம்பவயிடத்தை பார்வையிட எங்களிடம் விவரம் கூறி எங்கள் இருவர்

முன்பும் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் மேற்படி பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பற்றுவதாற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>- இல்லை.**

Taken down before/by me in open court Readover interpreted to the witness and acknowledged by him to be correct.

Judicial Magistrate No.II,
Panruti.